Sub Court, Eraniel OS.113/2021

Date: 20.04.2023.

வா.சா.1 - திரு. மைதீன்கான்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை –</u>

வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலும், முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்த சமயத்திலும் என் கைவசம் தான் இருந்தது என்றால் சரிதான். புகைப்படம் உள்ள விபரத்தை பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புகைப்படத்தை யார் எடுத்தார் என்ற விபரத்தை நான் பிராதிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. புகைப்படங்களை பார்த்தால் மின் இணைப்பை ஆய்வு செய்வது போல் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. புகைப்படம் எந்த தேதி எடுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகைப்படம் வழக்கிற்கு தேவையில்லாத ஆவணம் என்றாலும், புகைப்படத்தை எனக்கு சாதகமாக மாற்றம் செய்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.